பக்கங்கள் ஆறு

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 ஆடி 02 திங்கட்கிழமை ( 17 - 07 - 2000 ) VALAMPURI ஒலி: 210

★ சிறுபான்மை மக்கள் பிரச்சினைக்குத் தீர்வு ★ உரிய நேரத்தில் பொதுத்தேர்தல்

# பாராளுமன்றில் அரசியல் அமைப்பு சமர்ப்பிப்பு; யுத்தம் முடிவுக்கு வரும்!

## அரச அதிகாரிகள் மத்தியில் ஜனாதிபதி

[கொழும்பு விசேட நிருபர்]

**இலங்கையில் வாழுகின்ற தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டு தொடரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு, பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு முன்பதாகப் புதிய அரசியல் அமைப்பு சீர்திருத்த மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.**

**பாராளுமன்றத்தின் உத்தியோகபூர்வ பதவிக்காலம் முடிவடைந்தும் உரிய நேரத்தில் பொதுத்தேர்தல் நடாத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.**

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசாங்க நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் மத்தியில் உரையாற்றும்போது குறிப்பிட்டுள்ளார்.

பண்டாரநாயக்கா சர்வதேசமாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற இக்கூட்டத்தில் நாடளாவிய ரீதியில் 1700 நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்,

இக்கூட்டத்தில் ஜனாதிபதி தொடர்ந்து உரையாற்றுகையில்,

பொதுஜன ஐக்கிய முன்

(6 ஆம்பக்கம் பார்க்க)

## அரசியல் அமைப்பு திருத்த மசோதா ஆகஸ்ட் 1ல் பாரா.மன்றில் சமர்ப்பிப்பு?

(கொழும்பு)

உத்தேச அரசியல் அமைப்புச் சீர்திருத்த மசோதா பொதுஜன ஐக்கிய முன்னணி அரசினால் ஆகஸ்ட் 1 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது

ஆகஸ்ட் 1ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவிருக்கும் இம் மசோதா ஆகஸ்ட் 8ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 24ஆம் திகதி வரை விவாதித்து வாக்கெடுப்பு நடத்த விரும்பாத சிரேஸ்ட அமைச்சர் ஒருவர்

( 6ஆம் பக்கம் பார்க்க )

## கனரகஆயுதங்களுடன் மன்னாரில் படையினர்

(மன்னார்)

மன்னார் மற்றும் வங்காலைப் பகுதிகளில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இப்பாதுகாப்பிற்கு மேலதிகமான கடற்படையினர் நவீனரக ஆயுதங்கள் சகிதம் அங்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நவீன ரக ஆயுதங்களுடனும், கனரக வாகனங்களுடனும் திருமலையில் இருந்து சென்ற கடற்படையினர் அங்கு காவல் அரண்களை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## துன்னாலையில் கோஷ்டி மோதல் சிறுமி உட்பட மூவர் படுகாயம்

(புலோலி)

துன்னாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கோஷ்டி மோதலில் சிறுமி ஒருவர் உட்பட மூன்று பேர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

துன்னாலையைச் சேர்ந்த பொன்ராஜ் ருபவாணி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இறுதிக் கிரியை இன்று

(யாழ்ப்பாணம்)

மாணவன் சஞ்சீவனின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 10 மணிக்கு நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இறுதிக்கிரியைகளில் யாழ். மாவட்ட பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாண

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)

பேலியகொடவில் மூன்று தமிழ் இளைஞர்கள் நேற்று பேலியகொட பொலிசாரினால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்;

(6ஆம்பக்கம் பார்க்க)

## இன்று பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக்கல்லூரி மாணவன் சோ. சஞ்சீவனின் படுகொலையைக் கண்டிக்கும் முகமாக யாழ். பல்கலைக்கழக அனைத்து பீடமாணவர்களும் தமது விரிவுரைகளை இன்று பகிஷ்கரிப்பதாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (வ-4)

## சஞ்சீவனுக்கு நூற்றுக்கணக்கான மாணவர்கள் அஞ்சலி செலுத்தினர்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக்கல்லூரி மாணவன் சஞ்சீவன் கொலையால் பரிதவிக்கும் மாணவர்கள் நேற்று இரண்டாவது நாளாக சோகமே உருவாகக் காணப்பட்டனர்.

நேற்று பலநூற்றுக்கணக்கான மாணவர்கள் சஞ்சீவனின் இல்லத்திற்குச் சென்று தமது இறுதி அஞ்சலியைச்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அஞ்சலிக்காக 'இந்துவில்' வைக்கும் மாணவர்களின் முயற்சி தோல்வி?

(யாழ்ப்பாணம்)

மாணவன் சஞ்சீவனின் பூதவுடலை யாழ். இந்துக் கல்லூரியில் அஞ்சலிக்காக வைப்பதற்கு உயர்தர மாணவர்கள் எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்ததாகத் தெரியவருகிறது. கல்லூரி நிர்வாகத்தில் ஒருசிலரும் வெளியார் ஒருவரும் உடன்படாத காரணத்தினால் இம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். இந்துமாணவன் கொலைகுறித்த கண்டன அறிக்கைகள்

### பல்கலை மாணவர் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரி மாணவன் சோ. சஞ்சீவன் கடந்த 13 ஆம் திகதி கொலை செய்யப்பட்டமை குறித்து யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்டன அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட விபரம் வருமாறு:-

யாழ். இந்துக் கல்லூரி

(6ஆம் பக்கம் பார்க்க)

### சஞ்சீவனின் கொலையால் மாணவரின் எதிர்காலம் கேள்விக்குறியாகவுள்ளது

யாழ். இந்துக் கல்லூரி மாணவன் சோமசுந்தரம் சஞ்சீவன் கொலை செய்யப்பட்டமை குறித்து முழுச் சமூகமுமே திகிலடைந்துள்ளது.

இவ்வாறு யாழ். இந்துக் கல்லூரி மாணவன் சோ. சஞ்சீவன் கொலையைக் கண்டித்து வட மாகாண ஆசிரியர் சங்கம் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

(6-ஆம்பக்கம் பார்க்க)

### சஞ்சீவனுக்கு அஞ்சலி செலுத்துமாறு அதிபர்கள் சங்கம் அழைப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரி மாணவன் சோமசுந்தரம் சஞ்சீவனின் இறுதிக் கிரியைகளில் சகல கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களை கலந்துகொண்டு அஞ்சலி செலுத்துமாறுவட மாகாண அதிபர்கள்சங்கம் விடுத்த அறிக்கையில்வேண்டு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நீதியான விசாரணை உடன் நடத்த காமினி ஜெயசுந்தர உறுதி!

[யாழ்ப்பாணம்]

யாழ். இந்துக் கல்லூரி மாணவன் சஞ்சீவனின் படுகொலை தொடர்பாக இராணுவத்தலையீடற்றநீதியான விசாரணை நடத்த தான் உடன் நடவடிக்கை எடுப்பதாக 51வது படைத் தளபதி காமினி ஜெயசுந்தர உறுதி அளித்துள்ளார்;

மாணவன் சஞ்சீவனின் மரணம் தொடர்பாக ஊரெழுவில் நடந்த சந்திப்பொன்றிலேயே அவர் இவ்வாறு உறுதியளித்தார்.

யாழ். இந்துக் கல்லூரி அதிபர், சிறிக்குமரன் வடமாகாண அதிபர்கள் சங்கத் தலைவர் க. இராசதுரை, மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி தணிகாசலம்பிள்ளை பழைய மாணவ சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டு மாணவன் சஞ்சீவன் எவ்வகையிலும்

( 6ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யாழ். மாவட்டத்தில் வறியோருக்கென 'மக்கள் கமிட்டி' அமைக்க பணிப்பு

## அரச அதிபர் விடுத்தார்

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போதைய போர்க்காலச் சூழ்நிலையில் கீழ்மட்ட மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகளை உடனுக்குடன் ஆராய உதவும் பொருட்டு 'மக்கள் கமிட்டி' ஒன்றினை அமைக்கும் படி யாழ். அரச அதிபர் க. சண்முகநாதனிடம் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக மேலும் அறியப்படுவதாவதுப் அண்மைய இடம் பெயர்வின் போது இடம் பெயர்ந்த மக்கள் தமது நிவாரணத்தைப் பெறுவதிலும் அவை தொடர்பாக சில கிராம சேவையாளர்களைச்சந்தித்து தமது கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதிலும் பல கஷ்டங்களை எதிர் நோக்கியும் வருகின்றனர்.

இவ்விதமான காலகட்டங்களில் மக்கள் தமது கஷ்ட நிலைகளை எங்கு எடுத்துக் கூறிப் பரிகாரம் தேடுவது என்று மக்கள் தெரியாமல் உள்ளனர்.

ஆதலால் இவ்விதமான மக்கள் கமிட்டி அவசியம் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

(க-77)

# பொலிஸ் படைக்கு ஆட்சேர்ப்பு அதிரடிப்படையில் இணைய பலர் விருப்பம்

(கொழும்பு)

பொலிஸ்படைக்கு ஆட்சேர்க்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பம்பலப்பிட்டி வெளிக்கள படைத்தள அலுவலகத்தில் நடைபெறும் இவ் ஆட்சேர்ப்பு நடவடிக்கைக்கு ஏராளமான இளைஞர்கள் விண்ணப்பித்திருப்பதாகவும், தினமும் நேர்முகத்தேர்வின் மூலம் சுமார் 200 பேர் பொலிஸ் படைக்கு தெரிவு செய்யப்பட்டு வருவதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேசமயம், பொலிஸ் அதிரடிப் படைக்கு ஆறாயிரம் பேர் வரை விண்ணப்பித்திருப்பதாகவும் இவர்களில் தகுதியுடையோர் தெரிவு செய்யப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### விநியோகம்

கட்டைவேலி நெல்லியடி பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிளை நிறுவனங்களில் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன்கருதி மாணவர்களிற்கு இரண்டு லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. [த-1 6]

# கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் காசநோய் பிரிவு இயங்க எதிர்ப்பு

(கோப்பாய்)

கோப்பாய் அரசினர் வைத்தியசாலையின் ஒருபகுதியில், காசநோயாளர் பிரிவினை இயங்கவைப்பதற்காக எடுக்கப்பட்ட முடிவினை மறுபரிசீலனைசெய்யுமாறு இப்பகுதி பொதுமக்களும், பொதுநிறுவனங்களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளன.

சாவகச்சேரி மருத்துவமனையுடன் இயங்கிய காசநோயாளர் பிரிவு, அங்கு ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக தொடர்ந்தும் இயங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் கோப்பாய் அரசினர் வைத்தியசாலையின் ஒரு பகுதியில் காசநோய் பிரிவினை இயங்க வைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

கோப்பாய் அரசினர் வைத்தியசாலையும் அதனை அண்டிய பகுதியும் சனநெருக்கடி மிகுந்து காணப்படுவதனால் காசநோய் பிரிவு இயங்குவதற்குஏற்ற சூழல் அங்கு நிலவவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இப்பகுதியில் காசநோய்ப் பிரிவு இயங்குமாயின் இந்நோய்ப் பரவல் அதிகளவில் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகம் ஏற்படும் எனவும் சுட்டிக்

# திருவிழா எளிமையான முறையில்

# விலைவாசி உயர்வைக் கண்டித்து ஐ. தே. கட்சி பெரும் ஆர்ப்பாட்டம்

## அரசியல் கட்சிகள் யாவும் எதிர்ப்பாம்

(கொழும்பு)

விலைவாசி உயர்வைக் கண்டித்து வரும் 18 ஆம் திகதி ஐக்கிய தேசியக்கட்சியினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கு ஆர்ப்பாட்டப் பேரணிக்கு அரசியல் கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்கள் பெரும் அதிருப்தியை தெரிவித்துள்ளன.

இன்று, மக்கள் உயிருடன் செத்துக்கொக்ண்டிக்ருகிறார்கள்என ஐச்சிய தேசியக்கட்சி கூறுகிறது ஆனால் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்காலத்தில் மக்கள் வாழ மட்டுமன்றி சவதற்கும் உரிமை இருக்கவில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தொழிற் சங்க சம்மேளனத் தலைவர் அலவி மௌலானா கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதேபோன்று வேறும் பல கட்சிகளும் தொழிற்சங்களுங் கம்தமது எதிர்ப்பினை வெளியிட்டுள்ளன.

இதே சமயம், 1980 ஆம் ஆண்டு ஜுலை மாதம் இடம்பெற்ற வேலை நிறுத்தப் போரட்டத்தின் 20 ஆம் ஆண்டு நிறைவு நாளில் மேற்படி ஆர்ப்பாட்டப் பேரணியினை ஐக்கிய தோசியக்கட்சியினர் ஒழுங்கு செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## பங்கீட்டு அட்டை மீளாய்வு

(அரியாலை)

வலிகாமம் வடக்கு மற்றும் உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம சேவை அலுவலர் பிரிவுகளில் இடம்பெயர்ந்து தங்கியுள்ள மக்களின் பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

எனவே சம்பந்தப்பட்ட மக்களை மேற்படி மீளாய்வு செய்வதற்கான ஒத்துழைப்பை வழங்குமாறு கிராம உத்தியோகத்தர்கள் கேட்டுள்ளனர். [உ-106]

## மீண்டும் கசிப்பு உற்பத்தி

[வல்வெட்டித்துறை]

கொற்றாவத்தை, சமரபாகு, கம்பர்மலைப் பகுதிகளில் கசிப்பு விற்பனை மீண்டும் அதிகரித்திருப்பதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில காலங்களுக்கு முன் இப் பகுதிகளில் கசிப்பு உற்பத்தி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வந்த போதிலும் நலன் விரும்பிகள் மற்றும் பொலிஸ் தரப்பினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பலனாய் உற்பத்தி கட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

இதே சமயம், கொற்றாவத்தைப் பகுதியில் அண்மையில் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார் பல போத்தல் கசிப்பினைக் கைப்பற்றியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (உ-16)

## ஊரடங்கு நேரத்தில் திருட்டு

(இணுவில்)

ஊரடங்கைப் பயன்படுத்தி திருட்டுமுயற்சியிஈடுபடுவோர் தொகை தாவடி வடக்குப் பகுதியில் அதிகரித்துள்ளது

இந்தவகையில், பலநோக்கு கூட்டுறவுச் சங்க ஊழியர் ஒருவருடைய வீட்டில் இரவு ஊரடங்கு வேளையில் நுழைந்த திருடர்கள் 35 பவுண் பெறுமதியான தங்க நகைகளை திருடிச் சென்றுள்ளனர். (உ-49)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஜுலை மாதம் 16-ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி யாழ். குடா நாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம்செய்யஅனுமதி வழங்கப்பட்டவர்களின்பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் தரப்படுகின்றது.

### சங்கானை

| | |
|---|---|
| 146304 ஏ | 146304 பி |
| 146354 ஏ | 146356 ஏ |
| 146363 ஏ | 146363 பி |
| 146363 சி | 146363 டி |
| 146382 ஏ | 146382 பி |
| 146382 சி | 146383 ஏ |
| 146383 பி | 146423 ஏ |
| 146424 ஏ | 146424 பி |
| 146424 சி | 146428 ஏ |
| 152562 ஏ | |

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 146339 ஏ | 126073 ஏ |
| 126073 பி | 148732 ஏ |
| 148746 ஏ | 148746 பி |
| 148746 சி | 148764 ஏ |
| 148764 பி | 148764 சி |
| 148764 டி | 148764 ஈ |
| 148774 ஏ | 153075 ஏ |
| 153075 பி | 153075 சி |

### நல்லூர்

| | |
|---|---|
| 141270 ஏ | 141390 ஏ |
| 141391 ஏ | 144076 ஏ |
| 146326 ஏ | 146326 பி |
| 146327 ஏ | 146327 பி |
| 153427 ஏ | 153427 பி |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 144089 ஏ | 146270 ஏ |
| 146270 பி | 146270 சி |
| 146270 டி | 146270 ஈ |
| 146270 எவ் | 146270 ஜி |
| 146306 ஏ | 146306 பி |
| 146306 சி | 146306 டி |
| 146306 ஈ | 146449 ஏ |
| 147235 ஏ | 148260 ஏ |
| 148260 பி | 148260 சி |
| 148284 ஏ | 148284 பி |
| 148284 சி | 152533 ஏ |
| 152533 பி | 152533 சி |
| 152533 டி | 152543 ஏ |
| 152543 பி | |

### தெல்லிப்பழை

139786 ஏ

### உடுவில்

| | |
|---|---|
| 134738 ஏ | 134738 பி |
| 134738 சி | 134738 டி |
| 141961 ஏ | 142140 ஏ |
| 142140 பி | 143592 ஏ |
| 143592 பி | 143592 சி |
| 143897 ஏ | 143897 பி |
| 143897 சி | 143887 டி |
| 143897 ஈ | 143922 ஏ |
| 143922 பி | 143922 சி |
| 143922 டி | 143922 ஈ |
| 144009 ஏ | 144009 பி |
| 144009 சி | 144166 ஏ |
| 144166 பி | 144166 சி |
| 146316 ஏ | 146332 ஏ |
| 146332 பி | 146333 ஏ |
| 746333 பி | 146333 சி |
| 146333 டி | 153428 ஏ |
| 153428 பி | 153463 ஏ |
| 153464 ஏ | 153470 ஏ |

(சு)

# குற்றம் புரிந்தவரே தட்டிக் கேட்பவரை தண்டிக்கும் அநியாயம்; மக்கள் அதிருப்தி

(அரியாலை)

திருட்டுத்தனத்தை தட்டிக் கேட்டவரை திருடவந்தவரே

செய்தபின் விடுவித்திருந்தார்.

அன்று இரவு அவர் வசித்து வந்த கோண்டாவில் இழக்

நோயாளர் பிரிவு, அங்கு ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக தொடர்ந் தற்குஏற்ற சூழல் அங்கு நிலவவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இப்பகுதியில் காசநோய்ப் பிரிவு இயங்குமாயின் இந்நோய்ப் பரவல் அதிகளவில் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகம் ஏற்படும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேசமயம்,

காசநோய் பிரிவு முன்பு இவ் வைத்தியசாலையுடன் இணைக்கப்பட்டிருந்ததும் இப்பகுதி இந்நோயை குணப்படுத்துவதற்கு சாதகமான நிலையைக் கொண்டிருக்கவில்லை என பொதுமக்கள் தரப்பில் இருந்து சுட்டிக் காட்டப்பட்டதையடுத்து இப்பிரிவு மூடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (உ)

பகுதியில் அதிகரித்துள்ளது

இந்தவகையில், பலநோக்கு கூட்டுறவுச் சங்க ஊழியர் ஒருவருடைய வீட்டில் இரவு ஊரடங்கு வேளையில் நுழைந்த திருடர்கள் 35 பவுண் பெறுமதியான தங்க நகைகளை திருடிச் சென்றுள்ளனர். (உ-49)

144089 ஏ 146270 ஏ (சு)

## திருவிழா எளிமையான முறையில்

(அரியாலை)

நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் திருவிழா இம்முறை மிகவும் எளிமையான முறையில் கொண்டாடப்பட்டு வருகின்றது.

அப்பகுதியில்நிலவியபதற்ற நிலை காரணமாக பொதுமக்கள் இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்றுவிட்டமையினாலேயே இம்முறை திருவிழா எளிமையாக நடைபெற்று வருகிறது.

(உ-106)

## இவ்வருடம் தேயிலை உற்பத்தி என்றுமில்லாதவாறு அதிகரிப்பு

### பெருந்தோட்டத்துறை தெரிவிப்பு

இவ்வருடம் தேயிலை உற்பத்தி என்றுமில்லாதவாறு அதிகரித்திருப்பதாக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சகம் அறிவித்துள்ளது.

இவ்வருடம் மேமாதத்தில் மட்டும் 2 கோடியே 94 இலட்சம் கிலோகிராம் தேயிலை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. கடந்த வருட இதே காலப்பகுதி உற்பத்தியுடன் ஒப்பிடும் போது 25 வீத அதிகரிப்பு இவ்வருடம் காணப்படுகிறது.

அதேசமயம் இவ் வருடத்தின் முதல் 5 மாதங்களில் மட்டும் 13 கோடி 25 இலட்சம் கிலோகிராம் தேயிலை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் மலை நாட்டுத் தேயிலை 108 ரூபா 48 சதமாகவும் தாழ்ந்த நிலத் தேயிலை 134 ரூபா 52 சதமாகவும் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இவ் அதிகரிப்புக்கு உற்பத்தியாளர்களின் ஆர்வம் புதிய உற்பத்தி முறைகள் அறிமுகம் ஆகியவையே காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

## இடம்பெயர்ந்த மக்கள் இடமாற்றம்

[கல்வியங்காடு]

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் தங்கியிருந்த இடம்பெயர்ந்த மக்கள் கலட்டிப்பகுதியில் உள்ள தனியார் வீடொன்றுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

மேற்படிபாடசாலை மாணவர்களது கல்விச் செயற்பாடுகளை இடையூறின்றி நடத்துமுகமாகவே இவ்விடமாற்றம் அமைந்திருப்பதாகப் பாடசாலை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (உ-54)

## கல்விப் பணிப்பாளர் வேண்டுகோள்

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த சகல முதன்மை ஆசிரியர்களையும் எதிர்வரும் யூலை 19ம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ் நெல்லியடி ம.ம.வித்தியாலயத்தில் இயங்கும் தென்மராட்சிக் கல்வி வலயத்திற்கு வருகை தருமாறு கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (க)

## குற்றம் புரிந்தவரே தட்டிக் கேட்டவரை தண்டிக்கும் அநியாயம்; மக்கள் அதிருப்தி

(அரியாலை)

திருட்டுத்தனத்தை தட்டிக் கேட்டவரை திருடவந்தவரே இரவோடிரவாகச் சென்று தாக்கிய சம்பவமொன்று அண்மையில் கோண்டாவில் கிழக்குப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம்பற்றித் தெரிய வருவதாவது,

நல்லூர் கிழக்குப்பகுதியில் இருந்து இடம் பெயர்ந்த கோண்டாவில் கிழக்குப்பகுதியில் வசித்துவரும் ஒருவர் அண்மையில் தமதுவீட்டைப் பார்க்கச்சென்றவேளை, அவரது வீட்டுமுருங்கைமரத்தில் களவாக முருங்கைக்காய் பறித்தவரை கையும்மெய்யுமாகப் பிடித்து எச்சரிக்கை செய்தபின் விடுவித்திருந்தார்.

அன்று இரவு அவர் வசித்து வந்த கோண்டாவில் கிழக்குப்பகுதிக்குவந்த மேற்படி திருட்டுநபர் தலைமையிலான குழுவொன்று விசாரணையென வெளியே அழைத்துச் சென்று கடுமையாகத் தாக்கிவிட்டுத் தலைமறைவாகியுள்ளது.

குற்றம்புரிந்தவர்களே, தட்டிக்கேட்டவர்களை தண்டிக்கும்அளவிற்கு சமூகத்தில் அநீதிபெருகி விட்டதாவெனவும் இதனைத் தட்டிக்கேட்க யாருமே இல்லையாவெனவும் இச்சம்பவம்குறித்து பொதுமக்கள்தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-106]

## ஈச்சமோட்டையில் திருட்டு முயற்சி வெற்றிகரமாக முறியடிப்பு

ஈச்சமோட்டைப் பகுதியில் வைரவ கோவிலில் இடம்பெற்ற திருட்டு முயற்சி வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டது.

இதனையடுத்து திருட்டு முயற்சியில் ஈடுபட்டோர் தமது பொருட்களை கைவிட்டு தலை தெறிக்கஓட்டம் பிடித்தனர்.

இதேவேளையில் இப் பகுதியில் சனிக்கிழமை ஊரடங்குவேளையில் இ.ஜேஅல் பிரட் ரி.பி. விஜயசிங்கம் என். பேரின்பம் ஆகியோரது வீடுகள் உடைக்கப்பட்டு பொருட்கள் சூறையாடப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேற்படி திருட்டுக்கள் ஊரடங்குவேளையில் நிகழ்வதால் தம்மால் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ள முடியவில்லை என விழிப்புக் குழுவினர் முறையிட்டுள்ளனர்.

(க)

நாவாந்துறைப் படிப்பகம்

## இந்தியாவின் பெருமைக்கு உரிய; சிறுவன் அஜே-பிரதமர் புகழாரம்

மூன்று வயதான அஜ்ஜபூரி(Ajay puri) அண்மையில் இந்தியாவில் நடைபெற்ற தொழில் நுட்ப உச்சிமாநாட்டில் பங்குபற்றுவதற்காக இந்திய பிரதமர் அடெல் பிஹாரி வாஜ்பாய் அழைப்பு விடுத்திருந்தனர்.

அஜே, தற்போது பாங்கொக்கில் வசித்து வருகின்றான். மாநாட்டில் பங்குபற்றிய அஜே, குடியரசு தலைவர் கே. ஆர். நாராயணன் திருமதி சோனியா காந்தி, பிரதான முதலமைச்சர்கள் பலரை அங்கு சந்தித்துள்ளான். அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனின் மகள் செல்சியாவை சந்தித்த போது அவர் மடியில் இவன் தூங்கிவிட்டான். இவனது சாதனை பற்றியும் பில் கிளின்ரனுடனான சந்திப்பு பற்றியும், இந்திய பத்திரிகைகள் எல்லாமே முன் பக்க செய்தியாக பிரசுரித்தன வானொலி தொலைக்காட்சி செய்திகள் கூட விட்டு வைக்கவில்லை பில் கிளின்டனுடன் நீண்ட நேரம் பேசிய அஜே தான்தற்போது பில் கிளின்டனை சந்தித்து விட்டேன். அடுத்து அவரது இடத்திற்கு போக வேண்டும் என்று கூறினாராம்.

அஜே கணனியில் Micro soft office soft ware நிகழ்ச்சி தயாரிப்பு பற்றி அத்துவேறாக வாஜ்பாய் அவர்கட்கு செயற்படுத்தி காட்டினான். வாஜ்பாய் அவருக்கு 70 வயது ஆன போதிலும்அஜேயை உடனே கட்டித்தழுவி தூக்கிகொண்டார். மகிழ்ச்சியில் ஐதராபாத் நகர Club தலைவர் அஜேக்கு "இந்தியாவின் மகிழ்ச்சிக்கும் பெருமைக்கும் உரியவன்" என்ற கௌரவ விருதை இவனுக்கு வழங்கியுள்ளார்.

அஜேக்கு தனது விருப்பமான சினிமா நடிகர் அமீர் கானை சந்திக்காதது ஏமாற்றமாக இருந்ததாம். கணனியில் 3 வயதில் சாதனை படைத்தான் அஜே.

### இந்திய மத்திய பிரதேச

## ஆந்திர எல்லையில் படகு விபத்து 20 பேர் பலி 7 பேரை காணவில்லை

(புதுடில்லி)

மத்திய பிரதேசத்தில் ஆற்றில் சென்று கொண்டிருந்த படகொன்று கவிழ்ந்ததில் அதில் பயணம் செய்த 20 பேர் பலியாகினர். 15 பேர் கடும் காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளனர்.

மத்திய பிரதேசத்தின் ஆந்திரா எல்லைப் பகுதி ஆற்றில் சென்று கொண்டிருந்த இப்படகில் 42 பேர் பயணம் செய்தனர் என தெரியவந்துள்ளது: இருந்த போதும் 7 பேர் பற்றிய தகவல்கள் எவையும் தெரியவரவில்லை.

இவர்கள் அலைகளினால் இழுத்துச்செல்லப்பட்டு இறுதியல் மரணமடைந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

இவர்களைத் தேடிக்கண்டு பிடிக்கும் பணியில் பொலிஸ் பிரிவின் சுழியோடிகள் பலர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

(உ)

## பிணையாட்களாக வைக்கப்பட்ட இந்திய அமைதிப் படையினர் மீட்பு

### ஸியாராலியோனில் சம்பவம்

[லண்டன்[

மேற்கு ஆபிரிக்க நாடான ஸியாராலியோனில் ஐ. நா. அமைதிப்படையில் பணியாற்றிக் கொண்டியுக்கும்போது புரட்சியாளர்களால் பிணையாட்களாகச் சூழப்பட்டிருந்த இந்திய இராணுவ வீரர்கள் அனைவரும் மீட்கப்பட்டுவிட்டார்கள்.

சுமார் இரண்டு மாதங்களாகப் புரட்சியாளர்களால் சூழப்பட்டு ஒரு நகரத்தில் வைக்கப்பட்டிருந்த இந்திய வீரர்கள் ஐ. நா. படையினரின் அதிரடி இராணுவ முயற்சி மூலம் விடுவிக்கப்பட்டார்கள்.

[து]

## நட்சத்திர ஏவுகணை தயாரிப்பு வெற்றி

# தென்கொரிய படைமுகாம் முன் மாணவர், பணியாளர் ஆர்ப்பாட்டம்

### இரசாயன கழிவுகள் கொட்டப்படுகிறதாம்

(சோல்)

தென்கொரியாவில் உள்ள அமெரிக்கத் துருப்புக்கள் சோல் ஆற்றில் இரசாயனக் கழிவுகளைக் கொட்டுவதாகத் தெரிவித்து அதனைக் கண்டிக்கும் வகையிலான ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்தினம் மேற்படி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சோல் டவுட்டவுண் என்னும் இடத்திலுள்ள ஜங்சன் அமெரிக்க இராணுவ முகாமுக்கு முன்ஆயிரக்கணக்கான பாடசாலை மாணவர்கள், அரச பணியாளர் ஆகியோர் இவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்:

இதன்போது, இவ்வெட்கக்கேடான இழி செயலைப் புரிந்தவர்கள் மன்னிப்புக் கோர வேண்டும் எனவும், அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் கோரப்பட்டதாகவும் தெரியவருகிறது.

சடலங்கள் அழுகிப்போகாமல் இருப்பதற்காக பயன்படுத்தப்படும் புற்றுநோய் மற்றும் குறைபாடான குழந்தைகள் பிரசவிக்கப்பட காரணமான திரவம் ஒன்றினை அமெரிக்க துருப்புக்கள் ஆற்றில் கொட்டியது ஊர்ஜிதமாகியுள்ளது.

இதேசமயம், ஆர்ப்பாட்டக்காரர்கள் மேற்படி இராணுவ முகாமின் வாயில்வரை நெருங்கிச் சென்றவேளை இராணுவத் தரப்பு அவர்களைத் தடுக்க முற்பட்டபோது கலவரங்கள் மூண்டதாக வேறோர் செய்தி தெரிவித்துள்ளது. எனினும் இவை தொடர்பானசேதவிபரங்கள் எவையும் தெரியவரவில்லை.

(உ)

## செய்திப்பரல்

★ அவுஸ்திரேலிய செனட் சபைத்தலைவர் மாக்கிரேட் அம்மையார் சீனா தேசம் சென்றுள்ளார்.

★ ஐரோப்பிய நாடாளுமன்றம் முரட்டுத்தனமாக திபேத்விடயத்தில் தலையிடுகிறதென்று சீனா சாடியுள்ளது;

★ காமராஜர் பிறந்த நாள் தமிழ்நாட்டில்பரவலாகக் கொண்டாடப்பட்டது,

★ திபேத்திய மருத்துவம் தொடர்பான மகாநாடு சீனாவில் தற்பொழுது நடைபெறுகிறது;

★ இலங்கையின் கோரிக்கையில் இந்தியா கூடியவரை தலையிடவேண்டும் என்று காங்கிரஸ் கட்சி கூறுகிறது.

★ இந்தியாவில் கடந்த இரு வாரங்களாகப் பெய்த மழையால் 200க்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

## 70 இலட்சம் பேர் வளைகுடாவில் தொழில் புரிகின்றனராம்

### புள்ளிவிபரங்கள் தெரிவிப்பு

(றியாட்)

அரபு நாடுகளை உள்ளடக்கிய வளைகுடாவில் சுமார் 70 இலட்சம் வெளிநாட்டுத் தொழிலாளர்கள் பணிபுரிவதாகவும் இவர்கள் வருடந்தோறும் 2 ஆயிரம் கோடி டொலரை தத்தமது தாய் நாடுகளுக்கு அனுப்பி வருவதாகவும் வளைகுடாவில் நடாத்திய ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

இவ் 70 இலட்சம் வெளிநாட்டுத் தொழிலாளர்களில் பெரும் பகுதியினர் ஆசியாவைச் சேர்ந்த இலங்கை, இந்திய, நேபாள நாட்டைச் சேர்ந்தவர்கள் எனவும் அவ் ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வளைகுடாப் பிரதேசங்கள், வெளிநாட்டுத் தொழிலாளர்களிலே பெரிதும் தங்கியிருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன், இந்நிலை தொடர்ந்தால் வளைகுடாவின் பூர்வீக மக்களுக்கு தொழில்கள் இல்லாமல் போகும் ஆபத்து ஏற்படலாம் எனவும் அவ் அறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது;

இதேசமயம்,

வளைகுடா பிராந்திய அரச நிறுவனங்கள் தனியார் கம்பனிகள் சில தமது செலவுகளைக் குறைத்துக் கொள்ளும் நோக்கில் வெளிநாட்டுத் தொழிலாளர்களைப் புறக்கணித்து வருவதும், இந்த வகையில் சவுதி அரேபிய நாடு, சட்டவிரோத வெளிநாட்டுத் தொழிலாளர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கடுமையாக அறிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

(உ)

## கனேடிய- சீன உறவுகள் குறித்து விரிவான முறையில் பேச்சு

(பீஜிங்)

சீன வெளியுறவு அமைச்சர் ஹாவுடாஸ் கே கனேடிய வெளியுறவு அமைச்சர் அக்போறியுடன்பேச்சுவார்த்தை நடத்தினார்.

கனடாவுடன் சேர்ந்து முயற்சி மேற்கொண்டு புதிய பொருளாதாரத்தை கட்டி எழுப்பும் நோக்காகவே இப்பேச்சுவார்த்தை இடம்பெற்றதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த சில ஆண்டுகளாக கனேடிய-சீன உறவு பரிதாகவும் உறுதியாக வளர்வதாகவும் சீன வெளியுறவு அமைச்சர் கூறினார் என்று தெரிவிக்கப்படுகிறது;

(து)

## நேபாளத்தில் தொடரும், பொலிஸார்-கிளர்ச்சியாளர் மோதல் நான்கு பொலிஸார் பலியாகினர்

(காட்மண்டு)

பாதுகாப்பற்ற நிலையில் ஆயுதங்

மழையால் 200க்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

★ மகேந்திர சௌத்திரியும் 17 பேரும் பிஜியில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

## நடுத்தர ஏவுகணை தயாரிப்பு வெற்றி ஈரான் நாடு அறிவிப்பு

(தெஹ்ரான்)

ஈரான் புதிய நடுத்தர அளவிலான ஏவுகணையை வெற்றிகரமாகப் பரிசோதித்துள்ளது.

130 கிலோ மீற்றர் தூரம் வரை சென்று இலக்குகளை தாக்கக்கூடிய வல்லமை கொண்டதாக இப்புதிய நடுத்தர அளவிலான ஏவுகணை அமைந்துள்ளது.

ஈரான் நாடு தாம் ஏவுகணைகள், யுத்தவிமானங்கள் பீரங்கிகள், நீர்மூழ்கிக் கப்பல்கள் என்பவற்றை தயரித்து வருவதாக ஏற்கனவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஈரானின் இத்தகைய அறிவிப்பானது மத்திய கிழக்கு பிராந்தியத்தில் சற்று சலசலப்பை ஏற்படுத்தக்கூடுமென அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

(உ)

## பாகிஸ்தான் தூதுவர்களை ஏற்க மே. ஐரோப்பிய நாடுகள் மறுப்பு

[இஸ்லாமபாத்]

பாகிஸ்தான் தூதுவர்களை ஏற்க மேற்கு ஐரோப்பிய மற்றும் ஸ்கண்டிநேவியன் மறுத்துள்ளன.

சுவீடன், இத்தாலி மற்றும் பெல்ஜியம் ஆகிய நாடுகளே தூதுவர்களை ஏற்க மறுத்த நாடுகளாகும்.

பாகிஸ்தானில் இராணுவம் ஆட்சியை கைப்பற்றியதை இந்த நாடுகள் ஏற்கனவே ஆட்சேபித்திருந்தது தெரிந்ததே.

இதன் வெளிப்பாடே தூதுவர்களை ஏற்க மறுத்ததற்கு காரணம் என்று ஆங்கில நாளேடு ஒன்று தெரிவித்திருக்கிறது.

பாகிஸ்தான் தூதுவர்களை ஏற்க மேற்படி நாடுகள் மறுத்தமையானது அந்நாட்டின் வெளிநாட்டு இராஜதந்திர முயற்சிகளுக்கு பெரிதும் இடையூறாக அமையலாம் என சர்வதேச அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

(க-து)

## நான்கு பொலிஸார் பலியாகினர்

(காட்மண்டு)

நேபாளத்தின் மத்தியபகுதியில் பொலிஸாருக்கும் கிளர்ச்சிவாதிகளுக்கும் இடையே மூண்ட சண்டையில் 4 பொலிஸார் பலியாகியுள்ளனர்.

காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார்மீது, குழுவாகவந்த மாவோ கிளர்ச்சிவாதிகள் தாக்குதல் தொடுத்ததாகவும், இதனால் இருபகுதியினர்க்குமிடையே 3 மணி நேரமாக கடும்சண்டைகள் இடம்பெற்றதாகவும் கூறப்படுகிறது.

எனினும் கிளர்ச்சிவாதிகள் தமதுதரப்பில் எதுவித உயிரிழப்புமற்ற நிலையில் ஆயுதங்களுடன் தப்பியோடிவிட்டனர்.

இதேசமயம், நேபாளத்தில் நிலவும் முடியாட்சிக்கெதிராக, மாவோ கிளர்ச்சிவாதிகள் கடந்த 4 ஆண்டுகளாக மேற்கொண்டுவரும் தாக்குதல்களில் இதுவரை 300 இற்கும் மேற்பட்ட பாதுகாப்புப் படையினர் கொல்லப்பட்டிருப்பதாக தெரியவந்துள்ளது.

கம்யூனிச ஆட்சி ஒன்றை ஏற்படுத்த தீவிரவாதிகள் போராடிவருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ)

## புகைபிடிப்பதால் பாதிப்புற்றோருக்கு நட்டஈடு வழங்கப் பணிப்பு

### - புளோரிடா நீதிமன்றம் உத்தரவு

(நியூயோர்க்)

புகைப்பிடிப்பதால் பாதிப்படைந்தோருக்கு 14 ஆயிரத்து 500 அமெரிக்க டொலர்களை நட்டஈடாக செலுத்தவேண்டுமென அமெரிக்க புளோரிடாமாநில நீதிமன்றம் ஒன்று தீர்ப்பு வழங்கியது.

பிலிப்மூறி உள்ளிட்ட ஐந்து புகையிலைக் கூட்டுநிறுவனங்கள்மீதே இத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த பத்து ஆண்டுகளில் 5 இலட்சம் புகைப்பிடிப்போரை பீடித்துள்ள இருதய நோய், நுரையீரல்புற்றுநோய் புகைப்பிடிப்போடு தொடர்புடைய இதர 18 வகைநோய்கள் ஆகியவற்றிற்கு 5 புகையிலைக்கூட்டு நிறுவனங்கள் பொறுப்பேற்கவேண்டும் என்று 6 பேர்கொண்ட குழு நீதித்தீர்ப்பு வழங்கியுள்ளது.

இருந்தும் இத்தீர்ப்புமேல் முறையீட்டு நீதிமன்றத்தில் தள்ளுபடியாகுமென்று இந்த நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [து]

# இடம்பெயர்வு தான் வாழ்வின் நிதர்சனமா?

# வேதனையின்மத்தியில்அங்கலாய்க்கும்நம்மவர்

இடம் பெயர்வுகள் நம் தமிழர் வாழ்வின் அன்றாட நிகழ்வுகளுள் ஒன்றாகி விட்ட இன்றைய அவல நிலையில் அவர்களின் சோகக் கதைகளை வார்த்தைகளில் வடிப்பது என்பது இலகுவான ஒன்றல்ல.

ஆம்! ஷெல்களுக்கு இரையாகிப்போன சடலங்கள்ஒருபுறம் காயப்பட்டும் உற்றார் உறவினர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு கூடவாய்ப்போ வசதியோ இன்றி தாம் வாழ்ந்து வந்த தமது இல்லிடத்தை விட்டு தம்சொத்துக்கள் யாவற்றையும் இழந்த நிலையில் தென்மாரட்சியை சேர்ந்த குறிப்பாக சாவகச்சேரி, தனங்கிளப்பு கைதடி கோவிலாக் கண்டியுட்பட்ட சகல பகுதி மக்களும் மூட்டை முடிச்சுகளுடன் கொளுத்தும் வெய்யிலிலும்வலிகாமம் மற்றும் வடமராட்சி நோக்கி சோகமே உருவாக சென்ற அக்காட்சி நல்லோர் மனதை நிச்சயம் நெருடவே செய்யும்.

இந்த இச்சட்டான நிலையிலும் கூட சிந்தித்தும் மனிதாபிமானம் இன்றி அவர்களிடம் பெருந்தொகைப் பணத்தை சிறு உதவிகளுக்கு கூலியாக பெற்றவர்கள் எத்தர்கள் எத்தனை பேர்.

வறுமைக் கோட்டின் கீழ் அன்றாட தொழில்களைநம்பி வாழும் சராசரி மக்கள் மரங்களின் கீழும் உடைந்த கட்டடங்களிலும் தமதுபொழுதை கழிப்பது வேதனையிலும் வேதனையே.

### கல்வி வசதி இல்லை

அது மட்டுமன்றி சீரான உணவு, இருப்பிடவசதி எதுவு மற்ற நிலையில் அவர்களின் கல்வி வாய்ப்பானது ஒழுங்கான முறையில் அமையாது ஏனோ தானோ என்ற அடிப்படையில் அமைவது எதிர்கால நம் சமுதாய முன்னேற்றத்திற்கு ஏற்புடையதாகநிச்சயம் அமையமாட்டாது.

இந்த நிலையில் வரவிருக்கும் க. பொ. த(உயர்தரம்) மற்றும் ஆண்டு 05 புலமைப் பரிசில் பரீட்சைகளால் அப்பகுதி மாணவர்கள் நல்ல முறையில் தோற்றி சிறந்த பெறுபேறுகளை பெறுபவர்கள் எனஎதிர்பார்ப்பது இயலாத ஒன்றாகவே உள்ளது.

மேலும் அகதிமுகாம் வாழ்க்கை, போதிய வருமானம் இல்லாமை, சுகாதார வசதியின்மை, வாந்தி பேதி, நெருப்புக்காய்ச்சல் போன்ற நோய்களின் அதீதப்பெருக்கம் போன்றனவும் இடம் பெயர்ந்தோரை வெகுவாக வாட்டிவதைக்கின்றன.

அதுமட்டுமல்ல தென்மராட்சிப் பகுதியில் பெருமளவு வெதுப்பகங்கள் செயலற்ற நிலை, பயிர்செய்த நெல் மூடைகளை தம்முடன் கொண்டுவரமுடியாது நிவாரணத்தை நம்பிவாழும்நிலை, அகப்பட்டதை சுருட்டிக் கொள்ளும் நிலையில் தென்மராட்சிப்பகுதியில் உள்ள வீடுகளை கொள்ளையிடும் சொள்ளைக்கோஷ்டியின் அட்டகாசம் யாவும் அம்மக்களை சொல்லொணா வேதனைக்கு தள்ளியுள்ளன என்பதை நல்மனம் கொண்டோர் நிச்சயம் உணரவேசெய்வர்.

### உளவியல் பாதிப்பு

இன்று பெரும்பாலானோர் உளவியல் ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டவர்களாக காணப்படுகிறார்கள் என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளதும் நிச்சயம் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒரு சமூகப் பிரச்சினையே எனப் பலரும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த அவல நிலையில் அவர்களின் வாழ்விற்கு ஓரளவாவது உறுதுணையாக விளங்க வேண்டியது அரச அதிகாரிகள், அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் சமூக நலபொது அமைப்புகள் ஆகியவற்றின் ஆக்க பூர்வமான பணிகள என்பது நிச்சயம் கவனத்தில் கொள்ளப்படத்தக்கதே.

இந்த விடயத்தில் அவைகள் எவ்வளவு தூரம் சிறப்பாக செயல்பட்டன என்ற ஆய்வு ஒரு புறம் இருக்க வெந்த புண்ணில் வேல்பாய்ச்சாமல் நியாயமான விலையில் பொருட்களை விற்பதும் தேவையற்ற பதுக்கல் நாடகங்களை நிறுத்துவதும் வர்த்தகப் பெரு மக்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

அதுமட்டுமல்ல தற்போதைய அவல நிலையில் சீரான மண்ணெண்ணெய் விநியோகத்தை மேற்கொண்டு அம் மாணவச் செல்வங்கள் கல்வி கற்பதற்கு போதிய வசதி ஏற்படுத்திக் கொடுப்பதுடன், இடம் பெயர்ந்தோரின் வாழ்விற்கு உறுதுணையாக விளங்க வேண்டியதும் அவசியமாகும்.

மேலும் பாடசாலைகளில் தங்கியிருக்கும் இடம்பெயர்ந்தோர் பாடசாலை நிர்வாகத்தை குழப்பும் விதமாக நடந்து கொளளாமல் சற்று நாகரிகமாக நடந்துகொளள வேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.

பாடசாலை என்பது கல்விக் கூடமே தவிர கோஷ்டிச் சண்டைக்கும் அடி தடிக்கும் உரிய இடம அதுவல்ல என்பதனை சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமும் அவசரமுமாகும்.

எது எவ்வாறாயினும்இடம் பெயர்ந்தோரின் இன்னல் துடைக்க நமது அன்புக் கரங்கள் நீள வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

ஆதரவற்ற நம் சகோதரர்களுக்கு கை கொடுப்பதன் மூலம் அவர்களின் வாழ்வை மேம்படுத்தி நம் இனத்தின் மேன்மையை தரணி எங்கும் பறை சாற்றும் வகையில் நம்மை நாம அர்ப்பணிப்போமாக:

**நீர்வையூரான்**

## இளைஞர் கழகங்களின் துடிப்பு

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் புனித அன்னம்மாள் ஆலய பாண்டியன் தாழ்வு பங்கு இளைஞர் கழகமும், புனித கிறிஸ்து அரசர் ஆலய பங்கு இளைஞர் கழகமும் இணைந்து ''துடிப்பு'' என்னும்மாதாந்த சஞ்சிகையினை வெளியிட்டு வருகின்றனர்.

(உ-59)

## 100 வீடுகள் அமைப்பு

(மானிப்பாய்)

உயரப்புலம் ஒ, எல். ஆர். பாடசாலைகளில் தங்கியிருக்கும் இடம் பெயர்ந்த குடும்பங்கள மீளக் குடியமர்த்துவதற்கென ஆனைக் கோட்டை பழைய பொலிஸ் நிலையம் முன்பாகவுள்ள காணியொன்றில் பொது நிறுவன உதவியுடன் 100 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

(த-120)

## வவுனியாவில் வீரமக்கள் தினம்

(வவுனியா)

வவுனியாவில் புளொட் அமைப்பினரால் வீரமக்கள் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இத் தினத்தை ஒட்டி சிரமதான நிகழ்ச்சிகளும் இரத்த தான நிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (வ)

## உற்சவம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கலட்டி எச்சாட்டி மகா மாரியம்மன்கோவில்மஹோற்சவம் எதிர்வரும் 19 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. (க)

## பெறுமதி வாய்ந்த நூல்கள் தென்மராட்சியில் கைவிடப்பட்டன

### கல்வியாளர்கள் விசனம்

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் இடம் பெற்ற யுத்த நடவடிக்கைகளினால் சாவகச்சேரி, சரசாலை, நுணாவில், கைதடி, தச்சன்தோப்பு பகுதிகளில் நடாத்தப்பட்டு வந்த நூலகங்களில் இருந்த பெறுமதி வாய்ந்த நூல்கள் கைவிடப்பட்டுள்ளதையடுத்து கல்வியாளர்கள்விசனம் தெரிவித்துள்ளனர்.

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் சாவகச்சேரி நகரில் இயங்கிய இரு நூலகங்களும், நுணாவிலில் இயங்[...]டக்குழுவின் அறவழிப் பொது நூலகமும் பல இலட்சக் கணக்கான பெறுமதிமிக்க தமிழ், ஆங்கில, சிங்கள புத்தகங்களைக் கொண்டிருந்தன என்பதுகுறிப்பிடத்தக்கது.

இவை தவிர சாவகச்சேரி இந்துக்கல்லூரி, டிறிபேக்கல்லூரி, மகளிர் கல்லூரி, மட்டுவில் மகா வித்தியாலயம் உட்பட பல பாடசாலைகளில் இருந்த நூலகப் புத்தகங்களும் கைவிடப்பட்ட நிலையிலேயே இருப்பதாகத் தெரியவருகின்றது.

அத்துடன், யாழ்ப்பாணம்

## செஞ்சிலுவை வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

கீழே பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

பொன்னையா சதயன் மட்டுவில் தெற்கு சாவகச்சோரி, சின்னத்துரை கேதீஸ்வ ரன் மடத்தடி மீசாலை, அருணாசலம் பத்மநாதன் தீபவாசா மீசாலை வடக்கு மீசாலை, லோகேஸ்வரன் தாமோதரம் பிள்ளை சாவகச்சேரி, அன்ரன் ராசம்மா கண்டி வீதி எழுதுமட்டுவாள், சிவபாலன் சாந்தசௌரி 38/1 (141) 3ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம். பரமநாதன் கனகசபை 36/12 காட்டுக் கந்தோர்

## தென்மராட்சியில் பெறுமதி மிக்க ஆவணங்களை மீட்க மேற்கொண்ட முயற்சிகள் தோல்வி

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் இயங்கிய அரசாங்க அலுவலகங்கள், வங்கிகள் மற்றும் கூட்டுறவு அமைப்புகளில் கைவிடப்பட்டு வந்த பல பெறுமதி மிக்க முக்கிய ஆவணங்களை மீட்டு வருவதற்கு அரச உயர் அதிகாரிகளால் மேற் கொள்ளப்பட்ட முயற்சிகள் கைகூட வில்லை எனத் தெரிய வருகின்றது.

இதன் காரணமாக கைவிடப்பட்டு வந்த முக்கிய ஆவணங்களான அரச ஊழியர்களின் தனியார் கோவைகள், ஓய்வூதியர்களின் ஓய்வூ[...] ஆவணங்கள், ஆசிரியர்களின் சம்பளப்பட்டியல்கள் உட்பட பெரும்பாலானவை பற்றி சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் அதிகாரிகள் என்ன செய்வதென்று தெரியாத நிலையில் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

அதே வேளையில் அண்மைய இடம்பெயர்வின் போது மரண மடைந்த சில அரச ஊழியர்களின் ஆவணங்கள் கிடைக்காமையினால் அவ்வகைப்பட்ட அரச ஊழியர்களின் மனைவியர்களுக்கான விதவைகள் ஓய்வூதியம் தொடர்பான பணிகளை

வித்துள்ளனர்.

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் சாவகச்சேரி நகரில் இயங்கிய இரு நூலகங்களும், நுணாவிலில் இயங்கிய உபநூலகமும், சாவகச்சேரி பிரதேசசபையினால் நடாத்தப்பட்டு வந்த சரசாலை, கைதடி, தச்சன்தோப்பு பொது நூலகங்களும், சாவகச்சேரி தபாலக வீதியில் நடாத்தப்பட்டு வந்த 'லிங் லெண்டிங் நூலகமும்' அறவழிப் போராட்

களும் கைவிடப்பட்ட நிலையிலேயே இருப்பதாகத் தெரியவருகின்றது.

அத்துடன், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கைதடி சித்த மருத்துவ பீடத்தில் உள்ள சித்த மருத்துவம், ஆயுள் மருத்துவம் பற்றிய அரிய பெரிய நூல்களும், மிகப்பழமை வாய்ந்த பனை ஓலைச் சுவடிகளும் கைவிடப்பட்டதாகத் தெரியவந்துள்ளது. (க·சு-77)

சாந்தசெளரி 38/1 (141) 3ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம். பரமநாதன் கனகசபை 36/12 காட்டுக் கந்தோர் ஒழுங்கை யாழ்ப்பாணம், மனோகரன் சமுண்நாதன் தாபல் கந்தோர் வீதி சாவகச்சேரி, தம்பிப்பிள்ளை சோமசுந்தரம் 2 புகையிரத நிலைய வீதி சாவகச்சேரி, டானியல் செபமாலையம்மா சிறுவர் இல்லம் கைதடி. (சு)

இதன் காரணமாக ... விடப்பட்டு வந்த முக்கிய ஆவணங்களான அரச ஊழியர்களின் தனியார் கோவைகள், ஓய்வூதியர்களின் ஓய்வூதியம் பற்றிய விபரங்கள், வங்கிகளின் வாடிக்கையாளர்களின் நிதி நிலுவை பற்றிய

அவ்வகைப்பட்ட அரச ஊழியர்களின் மனைவியர்களுக்கான விதவைகள் ஓய்வூதியம் தொடர்பான பணிகளை முன்னெடுக்க முடியாத நிலையும் தோன்றியுள்ளது என அறியப்படுகின்றது. (க-77)

## வைத்தியசாலையில் உயிருக்காக போராடும் அண்ணன் சொத்தை அபகரித்த பாசத்தம்பி

### மீசாலையில் சம்பவம்

அண்ணன் வைத்திய சாலையிலே உயிரிற்காக போராடிக்கொண்டிருக்க, தம்பி அண்ணனின் சொத்துக்களை அபகரித்துக்கொண்டு அண்ணனை அநாதையாக வைத்தியசாலையில் விட்டுச்சென்றார்.

இச்சம்பவம்பற்றி தெரியவருவதாவது; மீசாலையைச் சேர்ந்த குமாரவேலு என்பவருக்கே இக்கதி நேர்ந்துள்ளது: புற்றுநோய் காரணமாகப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலே சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தவேளை அங்கு சென்ற சகோதரன் அண்ணனுடன் சமரசப்பேச்சுக்கள் சரிவராது என்று கூறியதுடன் அவரது வங்கிப் பணம் உள்ளிட்ட சிலவற்றோடு, அண்ணனை அநாதரவாக கைவிட்டுச் சென்றுவிட்டார்.

மேலும் மேற்படி நபர், பலகாலமாக தனி வாழ்க்கை நடாத்தி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது ஆபத்தான நிலையில் அயலவர்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றார். (க - 21)

## சைக்கிள் திருட்டு

(அரியாலை)

யாழ். மத்திய பேருந்து பகுதியில் மருந்துக் கடையொன்றின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த புதியலுமாலா ஆண்கள், துவிச்சக்கர வண்டி கடந்தவாரம் திருடப்பட்டுள்ளது.

அரியாலையைச் சேர்ந்த இராசையா. ஜெயக்குமார் என்பவருடைய சைக்கிளே திருடப்பட்டது. (த-106)

## விண்ணப்பம் கோரல்

(அரியாலை)

லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக்கல்லூரியினால் ரோக விஞ்ஞானம் நாடி சாஸ்திரம் நஞ்சியல் சமஸ்கிருதம் ஆகிய பாடங்களை பகுதிநேரமாகப் போதிப்பதற்கான விரிவுரையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

(உ-106)

## சமூகத்திற்காக 'சேவை செய்த ஓய்வூதியர் மதிக்கப்பட வேண்டியோர்

### அங்குராப்பண கூட்டத்தில் உரை

(கோப்பாய்)

ஓய்வூதியர்கள் என்றும் போற்றப்பட வேண்டியவர்கள் அதே வேளையில் மதிக்கப்பட வேண்டியவர்கள் இவர்கள் தமக்கு மட்டுமன்றி சமூகத்துக்காகவும் அளப்பரிய சேவைகள் செய்து இன்று ஓய்வு பெற்று இருப்பதுடன் பலர் இன்றும் சமூகத்துக்காகவழிகாட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அரசும் இவர்களை மதிக்கிறது. இவ்வாறு கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியில் நடைபெற்ற வலிகிழக்கு ஓய்வூதியர் நலன்புரிச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலர் க. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இவர் தொடர்ந்து பேசுகையில் எல்லாச் சேவையாளர்களும் ஒரு அமைப்பாக ஒன்று சேர்ந்து ஓர் நிர்வாகத்தை அமைப்பதன் மூலம் தங்கள் நலன்களைப் பேணிக் கொள்வது போல இவ் ஓய்வூதியர்களையும் ஓர் அமைப்பின் கீழ் ஒன்றுசேர்த்து வலிகிழக்கு ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தை அமைக்கவுள்ளதாகவும் இன்று ஆரம்பித்துள்ள இச்சங்கம் என்கின்ற விதை பெருவிருட்சமாக வரவேண்டும் என்பதே தமது அவா என்றார்.

தொடர்ந்து நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவு இடம் பெற்றது. தலைவர் க. இ. குமாரசாமி உபதலைவர் எஸ். மகேந்திரன் செயலாளர் எஸ். கணபதிப்பிள்ளை உப-செயலாளர் கோபாலசிங்கம் பொருளாளர் கே. சிவசிதம்பரநாதன் ஆகியோரும் நிர்வாக குழு உறுப்பினர்களாக என் சுந்தரலிங்கம் ரி. தனபாலசிங்கம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (க-79)

ஆக்கமும் கேடும் அதனால்
வருதலால்
காத்தோம் பல் சொல்லின்
கண் சோர்வு

- குறள்

# வலம்புரி

## வேண்டுவதும் அதுவே

கொடிய யுத்தத்தால் மடிந்தவர்கள், மடிபவர்கள் ஏராளம். யானையைத் தடவிப்பார்த்த குருடர்கள் போல் குற்றமற்றவர்களை பொய்மாயச் சிந்தையால் சிரழிக்கப் படுவோரும் உயிர் நீத்தோரும் ஏராளமே. இதனை இந்தக் கட்டத்தில்பக்குவப்பட்ட சிந்தையோடு சிந்தித்திருக்கும் ஜனாதிபதி அம்மையாருக்கு நன்றி கூற வேண்டும்.

ஒருகை ஒலி தராதுஎன்பதை உணர எடுத்த காலமோ பெரிது. இறுதியிலாவது இருகையும் சேர்ந்தே ஒலி தரும் என்பதை ஒட்டு மொத்தமாக தமிழ்க்கட்சிகள் சிந்தித்தமைஆரோக்கியமானதே.

நிம்மதியின் ஒளிக்கீற்று உதயமாக திருந்திய உள்ளங்கள் திடமாக அசையாது செயற் படவேண்டும்.எது வரினும் நல்லன செய்ய, நீதியை நிலை நாட்ட தளம் பாது செயலாற்றவேண்டும்.

இனியும் தடங்கல்கள் ஏற்படாவண்ணம் சகல தரப்பினரும் பார்த்துக் கொள்ளவேண்டும். சீண்டும் வார்த்தைகள், நீதிக் கரங்களை விலங்கிடும் செயற்பாடுகள் மண்ணின் விடிவிற்குஅறவே கூடாது. சூடுகண்ட பூனை போல் இதனைக் கடைப் பிடித்தே ஆக வேண்டும்.

இன்றைக்கு அரசியல் கட்சிகளிடையே தியாக உணர்வுகள் கூடத் துளிர் விடுகிறது.தமிழ் மக்களின் நலனுக்காய் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையையும், பக்குவத்தையும் பாராட்டவேண்டும். அப்பன் சேமித்தாலும்

# யாழில் தொடரும் மாணவப் படுகொலைகள்

### குருக்ஷேத்திரம்

மாணவ சமூகத்திலேயே ஒரு நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது. ஆரோக்கியமான மாணவ சமூகத்தைக் கட்டியெழுப்பினால் அதுவே அந்நாட்டிற்கு நல்லதொரு மூலதனமாகும் என்பது அறிஞர்கள் கண்ட உண்மை.

## அன்று விபுலானந்தன்!

அதனால் உலக நாடுகள் தம் இளஞ்சந்ததிக்கு வழங்க வேண்டிய கடமைகளை-உரிமைகளை விரைந்து வழங்குவதில் முனைப்புடன் செயற்படுகின்றன இதற்கு ஈடுகொடுக்கும் வகையில் இலங்கை அரசும் தம்மின மாணவர்களின் நலனில்—உரிமையில் அக்கறை கொண்டு செயற்படுவது கண்கூடு.

ஆனால் இலங்கையின் வடபுலத்து மாணவர்களின் நிலை வேதனைக்குரியது — பரிதாபத்திற் குரியது. அடிப்படை வசதிகளின்றி — இருக்க இடமின்றி பாடசாலையின்றி திண்ணையிலும். தெருவிலும் நின்று தம் கல்வித் தாகத்தை தீர்க்க அவர்கள் படும் கஸ்ரங்கள் சொல்லி மாளா.

தாம் பெற்ற பிள்ளைகள் கால அசைவுக்கு ஈடுகொடுக்கும் வகையில் அவர்களை ஆளாக்க வேண்டும் என்பதில் பெற்றோர்கள் கொண்டுள்ள அக்கறையும் அதற்காக அவர்களின் கடின உழைப்புக்கும் நிகரில்லை.

ஆனால் அவையனைத்தும் ஒரு கணத்தில் கனவாக கற்பனையாக- காலம் முழுவதும் கண்ணீர் விடும் வேதனையாக மாறும். மாற்றும் பயங்கர- பரிதாப நிலை உலகில் எங்குமில்லாதவாறு இலங்கையின் வடபுலத்தில்-யாழ்ப்பாணத்தில் நடப்பது மௌனமான உண்மை.

1986-ம் ஆண்டு கோட்டையிலிருந்து வந்த துப்பாக்கிக் குண்டு யாழ். மத்தியகல்லூரியின் மாணவத் தலைவன் விபுலானந்தனின் உயிரைக் காவுகொண்டது. மூவாயிரம் மாணவர்கள் பார்த்து நிற்க கற்பித்த ஆசிரியர்கள் உடனிருக்க விபுலானந்தனின் உயிருக்கு உலைவைத்த வேட்டுக்கு மறைப்புக் கட்டாமல், மழுப்பாமல் வேட்டு வைத்திருந்தால் பதின்மூன்று ஆண்டு

## இன்று சஞ்சீவன்

களுக்கு முன்பே இனப்பிரச்சினைக்கு இலகுவில் தீர்வு கண்டிருக்க முடியும்.

ஆனால் மாணவப் படு கொலைப்பட்டியல் நீள்கிறது

## நாளை ???

அதில் யாழ். இந்துக்கல்லூரி மாணவன் சோமசுந்தரம் சஞ்சீவனும் அங்கத்தவனாகச் சேர்க்கப்பட்டுள்ளமை அயலவர்களின் கூற்றினால் நிரூபனமாகியுள்ளது.

இது நம் மண்ணில் நடக்கும் வழமை. இதுபற்றி உலகம் ஒரு போதும் கவலைப் படாது — விழிக்காது ஏனெனில், சர்வதேச பொது அமைப்புக்கள் எனக் கூறிக் கொண்டு யாழ்ப்பாணத்தில் இயங்கும் அமைப்பின் பிரதிநிதிகளுக்கு.

ரூபா நாணயத்தின் பெறுமதிக் குறைவால் உயர்ந்த சம்பளமும் போதாக்குறைக்கு வாகனமும் இருக்கும்போது நம்மினம் படும் துயர்பற்றி அவர்கள் கவலைப்படவோ நடக்கும் அநியாயத்தைஉலக அரங்கிற்கு எடுத்துக் கூற போவதே இல்லை இது சர்வ நிச்சயம்.

ஆனால் மாணவன் சஞ்சீவனின் படு கொலை. சகமாணவர்கள் மத்தியில் தீராத மன வடுவை ஏற்படுத்தி விட்டது என்பது மட்டும் உண்மை.

இதன் விளைவு எமது கல்வியின் எதிர்கால ஆரோக்கியத்தைக் கேள்விக் குறியாக்கியுள்ளதுடன். இலங்கை அரசு பற்றிய—படைத்தரப்புப் பற்றி எண்ணக்கருவிலும் ஓர் எதிர் மறையான தாக்கங்களையே உண்டுபண்ணும்.

அதனை தடுக்க— தவிர்க்க வேண்டுமாயின் உரியவர்கள் உண்மையைப் புரிந்து கொண்டு உரியவர்கள் மீது உடன் நடவடிக்கை எடுத்து மனித உயிருக்கு மதிப்பு உண்டென்பதை உறுதிப்படுத்த வேண்டும். தவறின் இனப் பிரச்சினைத் தீர்வு என்பது ஏமாற்றமாகவே இருக்கும். யுத்த மேகத்தின் நகர்வு கடினமாகும்.

**விதுரன்**

# பெருமளவு மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்பட்டமை கண்டுபிடிப்பு

## அநுராதபுரப்பகுதியில் சம்பவம்

(கொழும்பு)

அநுராதபுரம் பகுதியில் அடர் காடு ஒன்றில் பெருந்தொகை மாடுகள் இறைச்சிக்காகவெட்டப்படுவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

வடமத்திய மாகாண குற்றத்தடுப்பு பொலிஸ்பிரிவினர்க்குக் கிடைத்த தகவலையடுத்து அப்பகுதியினை சுற்றி வளைத்துதேடுதல் நடாத்திய சமயம் மூவாயிரம் கிலோ எடையுடைய மாட்டுஇறைச்சி மீட்கப் பட்டுள்ளது. இதில் 9 கன்று ஈனும் நிலையிலான பசுமாடுகளும் இறைச்சிக்காக வெட்டப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது.

மேற்படி பசுமாட்டுக் கன்றுகளை ஆட்டு இறைச்சி எனப் பொய் கூறி இம்மோசடிக்கும் பல் விற்று வந்திருப்பதும் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.

இம்மோசடி நீண்ட காலமாகவே நடைபெற்று வந்ததாகவும், இதற்குக் காரணமானவர்கள் நீதிமன்றில் விளக்கமறியலில் வைக்கப் பட்டிருப்பதாகவும் வடமத்திய மாகாண குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவின் பொறுப்பாளர் கே. எம். பண்டார தெரிவித்துள்ளார். (உ)

# கால்நடைகள் திருடப்பட்டு மலிவு விலையில் விற்பனை

(இணுவில்)

அரியாலை, நாயன்மார் கட்டு, மற்றும் தென்மராட்சிப்பகுதி கால்நடைகள் கள்வர்களால் திருடப்பட்டு உடுவில், மருதனார் மடம் போன்ற இடங்களில் மிகவும் குறைந்த விலையில் விற்கப்படுவதாக பாதிக்கப்பட்டோர் புகார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி பகுதிமக்கள் தமது கால்நடைகளை விட்டு விட்டு இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வசித்துவருகின்ற நிலையைப்பயன்படுத்தி,கள்வர்கள் அவற்றை கவர்ந்து சென்று மிகவும் குறைந்த விலையில் விற்பனை செய்து வருகின்றனர்.

உரிமையாளர்கள் பலர் தமது கால்நடைகளை இனம் கண்டு உரிமைகோரியபோது அதனை மறுத்து தமக்குச் சொந்தமானவை எனக் கூறி விற்பதாகவும் தெரிய வருகிறது.

நல்ல இன ஆடுகள் ஆயிரம் ரூபாவுக்குக் குறைவாகவும், கோழிகள் மிகவும் குறைந்த

★ யாழ். பல்கலை பௌதீக கற்கை நெறிக்கு

# தேவையான புள்ளிகளைப் பெற்றும் அனுமதி கிடைக்காதோர் அவலநிலை

(யாழ்ப்பாணம்)

1999 / 2000 கல்வியாண்டில் யாழ். பல்கலைக் கழகத்தில் பௌதீக விஞ்ஞானம் 186 முதல் 197 வரை புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கான அனுமதி கிடைக்கவில்லை. இதற்கானகார கலைக்கழகத்துக்கு வந்துள்ள பட்டியலில் சேர்க்கப்படாமையினால் கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத நிலையில்

விடிவிற்குஅறவே கூடாது. சூடுகண்ட பூனை போல் இதனைக் கடைப் பிடித்தே ஆக வேண்டும்.

இன்றைக்கு அரசியல் கட்சிகளிடையே தியாக உணர்வுகள் கூடத் துளிர் விடுகிறது. தமிழ் மக்களின் நலனுக்காய் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையையும், பக்குவத்தையும் பாராட்டவேண்டும். அப்பன் சேமித்தாலும் ஆச்சி சேமித்தாலும் பிள்ளைக்குத்தானே என்ற மனப்பக்குவம் வளர்ந்து வருவது கண்டு மக்கள் மனம் மகிழ வேண்டும்.

நெல்லிக்காய் மூடையல்ல நெஞ்சுக்கு நீதி கொள்ளத்தக்க தமிழன். பஞ்சையாய் பராரியாய் எம்மவர்கரவன்வாழ்க்கை வாழ்வதைஇனியும் அனுமதியோம். மண்ணின் சுகத்தை அவர்கள் அனுபவிக்க வழிசமைப்போம். உண்மை உழைப்பாளிகளை இனங்காணுவோம். உண்மைக்குத்தலைவணங்குவோம். என்ற உயரியசிந்தனை எமக்காகத்தியாகம்புரியத் தலைப்பட்ட அனைவர்க்கும் உதயமாகட்டும்.

தமிழ் மக்களின் நலன் பெருக உரிமை உதயமாக தங்குதடையின்றிச்செய்ய வேண்டிய கட்டுப்பாடும் அவர்களுடையதே.

-அன்புடன் ஆசிரியர்

வெட்டப்பட்டிருப்பது தொல

★ யாழ். பல்கலை பௌதீக கற்கை நெறிக்கு

# தேவையான புள்ளிகளைப் பெற்றும் அனுமதி'கிடைக்காதோர் அவலநிலை

(யாழ்ப்பாணம்)

1999 / 2000 கல்வியாண்டில் யாழ். பல்கலைக் கழகத்தில் பௌதீக விஞ்ஞானம் கற்பதற்கான புள்ளிகளைப் பெற்றும் கூட கல்வி கற்கும் அனுமதி மறுக்கப்பட்ட அல்லலுறும் மாணவர்களாகிய நாம் எமது நிலை குறித்து உடனடி நடவடிக்கை எடுக்குமாறு தங்களை வேண்டுகிறோம்.

மேற்கண்டவாறு அவல நிலையிலுள்ள மாணவர்கள் ஈ. பி டி. பி. பொதுச்செயலாளர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு. அனுப்பிய அவசர செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இவர்களுடை பிரச்சினை பாராளுமன்ற உறுப்பினராகிய தாங்கள் கவனம் எடுத்து பாதிக்கப்பட்டுள்ளகைக்கெட்டியும் வாய்க்கெட்டாத நிலையில் அவதிப்படுகின்ற மாணவர்களாகிய எங்களுக்கு உரிய நடவடிக்கை எடுத்து யாழ். பல்கலைக் கழகத்தில் நாம் கல்வியை உடனடியாக தொடர்வதற்கு வழி செய்யுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம். எமது பிரச்சினைகள் வருமாறு!

1,180 முதல் 186 வரை புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் பல்கலைக் கழகத்தில் அனுமதிக்கப்பட்ட போதிலும் 186 முதல் 197 வரை புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கான அனுமதி கிடைக்கவில்லை. இதற்கானகாரணம் எமக்குப்புரியவில்லை எனவே 186 முதல்197வரை புள்ளிகளைப் பெற்ற மாணவர்களை யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் பயில்வதற்கு உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டுகிறோம்.

2) பல்கலைக்கழக பட்ட பயில்நெறிக்கு விண்ணப்பித்த சமயத்தில் பௌதிக விஞ்ஞானத்திற்கு முன்னுரிமை காட்டிய மாணவர்களுக்கு அப் பாடத்தைப் பயில அனுமதிக்காமை தகுதியிருந்தும் புறக்கணிப்பாகவே எமக்கு படுகின்றது.

3) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஒரு பிரிவான வவுனியா வளாகத்தில் LIST No. 1(வெற்றிடம் நிரப்பல்)க்கு அமைய பிரயோக விஞ்ஞானம் கற்பதற்கு அனுமதி கிடைத்ததால் பலரும் அங்கு பதிவுகளை மேற்கொண்டோம். ஆனால் அங்கு சென்று கற்கை நெறியினை இதுவரை நாம் மேற்கொள்ளவில்லை. வெற்றிடம் நிரப்பலின் படிதற்போது பௌதீக விஞ்ஞானம் கற்க 180 க்கு புள்ளிகளை பெற்றவர்கள் அனுமதிக்கப்படுவர் என்று அறிவிக்கப்பட்ட போதிலும் 186-197 வரை புள்ளிகளைப் பெற்ற எமது பெயர்கள் பல்கலைக்கழகத்துக்கு வந்துள்ள பட்டியலில் சேர்க்கப்படாமையினால் கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத நிலையில் எமது உயர்கல்வி பாதிக்கப்படுகிறது. எனவே எமது பெயர்ப்பட்டியலை பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவினர் யாழ்.பல்கலைக்கழகத்திற்கு உடனடியாக அனுப்பி வைப்பதற்கு ஏற்ற நடவடிக்கையினை உடனே செய்யுமாறு வேண்டுகிறோம்.

அதன் பிரதியை மாணவர்களுக்கும் கிடைக்க வழி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

4) முன்னுரிமையாக பௌதீகவிஞ்ஞானகற்கைநெறிக்கு வெற்றிடம் நிரப்ப பெயர்பட்டியல் வருவதற்கு பிரயோக விஞ்ஞானத்திற்கு பதிவுகளை மேற்கொள்ளவேண்டும்என்ற வழமையினால் வவுனியாவிற்கும் பதிவு செய்திருந்தோம்.

5) யாழ். பல்கலைக் கழக வளாகத்தில் பௌதீவிஞ்ஞானப் பாடநெறி தொடங்க ஐந்து வாரங்கள் கழிந்து விட்ட படியாலும் இனியும் கால தாமதம் ஆகாமல் உடன் நாம் கல்வியைத் தொடர தீவிர நடவடிக்கை எடுப்பீர்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

இவ்வாறு அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

மிகவும் குறைந்த விற்பனை செய்து வருகின்றனர்.

உரிமையாளர்கள் பலர் தமது கால்நடைகளை இனம் கண்டு உரிமைகோரியபோது அதனை மறுத்து தமக்குச் சொந்தமானவை எனக் கூறி விற்பதாகவும் தெரிய வருகிறது.

நல்ல இன ஆடுகள் ஆயிரம் ரூபாவுக்குக் குறைவாகவும், கோழிகள் மிகவும் குறைந்த விலையிலும் இப்பகுதியில் விற்பனையாவதை அவதானிக்க முடிகிறது.

இதே சமயம், பாடுபட்டவன் பார்த்திருக்க இடையில் வந்தவன் பலனை அனுபவித்துச் செல்லும் இந்நிலை தொடர அனுமதிக்கக்கூடாதென பலரும் அபிப்பிராயம் வெளியிட்டுள்ளனர்.

(உ-106)

## குப்பைமேடு சரிந்து 144 பேர் மரணம்

பிலிப்பைன்ஸில் குப்பைமேடு சரிந்து மரணமானவர்களின் எண்ணிக்கை 144 ஆக அதிகரித்துள்ளது.

கடந்தவாரம் பெய்த கடும் மழை காரணமாக பெரும் குப்பைமேடொன்றுசரிந்து, ஏழை மக்கள் வாழும் சேரிப்புற வீடுகள் பல வற்றை மூடிக்கொண்டது தெரிந்ததே.

மீட்புப் பணியாளர்கள் தொடர்ந்தும் மேற்கொண்டுவரும் முயற்சியின் பலனாய் இதுவரை 144 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இத்தொகை இன்னமும் அதிகரிக்கலாம் என நம்பப்படுகிறது.

(உ)

## புனித உத்தரிய தாயே

வெண்பா

கார்மேல் அமர்ந்தாளை கருணைஒளி நிறைந்தாளை
பூர்வீக வரலாற்றில் நிற்றாளை—சீர்துலங்கு
சத்தியவேதத்தின் செங்கமலச் செல்வியாள்
உத்தரியத்தாயை பாடு உவந்து

(அல்லைப்பிட்டி உத்தரிய அன்னையின் பெருவிழாவை யொட்டிய கவிதை இது.)

- கவி அல்லை - ஏகலைவன்

### விளையாட்டுச் செய்தி

## இங்கிலாந்து அணி வெற்றி

(கொழும்பு)

இங்கிலாந்து ''நிவசைக்'' மைதானத்தில், மேற்கிந்தியத் தீவுகள், இங்கிலாந்து அணிகளுக்கிடையே நேற்று முன் தினம்நடைபெற்றமுக்கோண ஒருநாள் கிறிக்கெட் போட்டித் தொடரில் இங்கிலாந்து அணி 10 விக்கற்றுக்களால் அபார வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத் தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி ஐம்பது ஓவர்கள் நிறைவில் 8 விக்கற்றுக்களை 169 ஓட்டங்களை பெற்றிருந் தது.

பதிலுக்குத் துடுப்பெடுத் தாடிய இங்கிலாந்து அணி 14.4 ஓவர்களில் 171 ஓட்டங் களை பெற்று 10 விக்கற் றுக்களால் வெற்றியீட்டியுள் ளது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ''பேக்கஸ் ரெஸ்கொனிக்'' 87 ஓட்டங் களையும், ''அலெக்ஸ் ருவெட்'' 74 ஓட்டங்களை யும் பெற்றுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ந-4)

### பல்கலை...

மாணவன் சோ. சஞ்சீவன் படுகொலை செய்யப்பட் டதை யாழ். பல்கலைக்கழக மாணவர் சமூகம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின் றது இவ்வாறான படு கொலைகள் மாணவர் மீதும் அப்பாவிப் பொது மக்கள் மீதும் நடாத்தப்படுவதை யிட்டு நாம் மிகவும் வேதனை அடைகின்றோம் இத்தகைய மனித உரிமை மீறல்களை மேற்கொள்கின்றவர்கள் மீது தகுந்த சட்ட நடவடிக் கைகளை எடுக்குமாறு சம்பந் தப்பட்ட தரப்பினர்களை கேட்டுக்கொள்கின்றோம்.

தெற்கில் இருந்து கொண்டு மனித உரிமைகள் பற்றிப் பேசுகின்ற மனித உரிமைக ளுக்கான யாழ். பல்கலைக் கழக ஆசிரியர் சமூகம் என தம்மைத்தாமே கூறிக் கொண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்ற படுகொலை கள் பாலியல் வல்லுறவுகள் காதுகள் போன்றவற்றைக் கண்டும் காணாதது போல் இயங்கும் இந்த அமைப்பை நாம் வன்மையாகக் கண்டிக் கின்றோம்.

யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகம் நடைபெறுகின்றது என வெளியுலகுக்குக் காட் டிக்கொண்டு இவ்வாறான மிலேச்சத்தனமான படு கொலைகளை மாணவர்கள் மீதும் அப்பாவிப் பொது மக் கள் மீதும் பிரயோகிக்க வேண்டாம் என்றும் பல் கலைக்கழக மாணவர் சமூ அரசினை வற்புறுத்திக் கேட் டுக்கொள்கின்றது.

என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது; (வ)

### கனரக...

அமைத்தும் புதிய முகாம் களை அமைத்தும் பலப் படுத்தி வருவதாகவும் மன் னார் செய்திகள் தெரிவிக் கின்றன.

இராணுவக் கட்டுப் பாட்டுப் பகுதிகளுக்கு பொருட்கள் செல்வதைத் தடை செய்யவும் தமிழ் அகதிகள் இந்தியா செல்வ தைத் தடுப்பதற்கும் இந் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (வ)

### சஞ்சீவனின்...

இடர்கள் மிகுந்த இக் காலத்திலும் ஒளி மயமான எதிர்கால எதிர்பார்ப்பை மனத்தில் சுமந்து கருத்தூன் றிக் கற்றுவந்த இம் மாண வனுக்கு ஏற்பட்ட சதி பிர தேச மாணவர்களின் எதிர் காலத்தை கேள்விக் குறி யாக்கியுள்ளது.

இச் சம்பவத்தை இலங்கை ஆசிரியர் சங்க யாழ். மாவட் டக் கிளை வன்மையாகக் கண்டிப்பதோடு சம்பந்தப் பட்டோர் அடையாளங் காணப்பட்டு தண்டிக்கப் படல் வேண்டுமெனக் கோரு வதுடன், இத்தகைய சம் பவங்கள் எதிர்காலத்தில் தொடராதிருக்க உருப்படி யான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்படல் வேண்டு மெனக் கேட்டுக்கொள்கின் றது. (வ)

## மரண அறிவித்தல்

### குமாரசுவாமி குருக்கள் ஞானச்சந்திர ஐயர்

குமாரசுவாமி குருக்கள் ஞானச்சந்திரஐயர் 16-7-2000 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் பார்வதி அம்மாவின் அன்புக்கணவரும் ஜெயமதி, தர்சனி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரீகாந்தன் (மதுவரி திணைக்களம்) சியாம்குமார் (கொமர்ஷல் வங்கி திருமலை) ஆகியோரின் மாம னாரும் ஆவர்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று திருமலை யில் நடைபெறும்.

தகவல்

இல. 11 புதிய சோனகதெரு
திருகோணமலை

ந. ஸ்ரீகாந்தன் (மருமகன்)
கி. நாராயணக் குருக்கள் (மைத்துனர்)
கதிரேசன் கோவில்
யாழ்ப்பாணம்

(கி-656)

## தமிழகத்திற்கு மீண்டும் அகதிகள்

(சென்னை)

இலங்கைத் தமிழ் அகதிகள் 13பேர் இந்தியா சென்றுள்ள தாக அறிவிக்கப்படுகிறது.

புதுக்குடியிருப்பை சொந்த இடமாக கொண்ட நான்கு குடும்பங்களைச் சேர்ந்த 13 பேர்தமிழ் நாட்டுக்கு அகதி களாகச் சென்றுள்ளனர்.

அகதிகளாகச்சென்ற பதின் மூன்றுபேரில் பெண் டாக்டர் ஒருவரும் அடங்குவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

### அரசியல்...

தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த நகல் சட்ட மூலத்தை விரைவில் உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பி தீர்ப்பைப் பெறவும் அரசு நடவடிக்கை எடுத்துள் ளது.

இம் மசோதா பாராளுமன் றத்தில் சமர்ப்பிக்கப்படுமுன் ஜனாதிபதி சந்திரிகா எதிர்க் கட்சித் தலைவர் ரணில்விக் கிரமசிங்காவையும் பிக்குமார் சம்மேளனத்தையும் சந்திக்க வுள்ளார். [வ]

### சுன்னாலை...

(வயது 15), சுந்தரராஜா (வயது 42), ஏ. குணம் (வயது 29) ஆகியோரே படு காயமடைந்தவர்களாவர்.

இதில் ரூபவாணியின் நிலை கவலைக்கிடமாகஇருப்பதாக வைத்தியசாலை வட்டாரங் கள் தெரிவித்தன.

(ந-52, 12)

### மூன்று...

கைது செய்யப்பட்ட மூன்று தமிழ் இளைஞர்களும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்படுகிறது. (வ)

### சஞ்சீவனுக்கு நூற்...

செலுத்திய வண்ணம் இருந் தனர்.

படுகொலை செய்யப்பட்ட மாணவனுக்கு அஞ்சலி செலுத்தும்முகமாக யாழ். நகரிலும், மற்றும் பகுதிகளி லும் உள்ள தனியார் கல்வி நிலையங்கள் யாவும் மூடப் பட்ட நிலையில் வெறிச் சோடிக்காணப்பட்டது.

சஞ்சீவனின் உருவப்படம் தாங்கியஅஞ்சலிப்பிரசுரங்கள் யாழ். நகரெங்கும் ஒட்டப் பட்டிருந்ததுடன் கறுப்புக் கொடிகளும் ஆங்காங்கே பறக்க விடப்பட்டிருந்தன. (வ)

### அஞ்சலிக்காக...

முயற்சி தோல்வியில் முடிந் ததாக நேற்று வலம்புரி அலு வலகத்திற்கு வந்த மாணவப் பிரதிநிதிகள் தெரிவித்தார் கள்.

குறிப்பு:- சிலரின் பெயர் குறிப்பிட்டு மாணவப் பிரதி நிதிகள் தந்த அறிக்கைநயக்க தக்க நாகரிகத்துடன் இங்கு விலக்கப்பட்டுள்ளது. (ந)

### சஞ்சீவனுக்கு அஞ்...

கோள் விடுத்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது மாணவன் சஞ்சீவனின் மர ணத்துக்கு கண்டணம் தெரிவிக்கும் தார்மீகக் கட மையிலிருந்து கல்விச் சமூகம் விலகிவிடமுடியாது.

அதேவேளை எமது மாண வர்களின் கல்வியை பாதிக் கும் எந்தச்சக்தியையும் நாம் அனுமதிக்கக்கூடாது எனவே மாணவர்கள் தமது சோகத்தை சக்தியாக்கி நாளை முதல் பாடசாலைக் குச் சென்று தமது கற்றல் செயற்பாட்டைத் தொடர வேண்டுமெனவும் அவ்வறிக் கையில் வேண்டுகோள் விடுக் கப்பட்டுள்ளது. (ந)

## மூன்று தமிழ்க் கட்சிகள் வன்னியில் கூட்டாக போட்டி

எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் வன்னிப் பகுதியில் மூன்று தமிழ்க்கட் சிகள் கூட்டுச் சேர்ந்து போட் டியிடுவதற்கான ஆயத்தங் களில் ஈடுபட்டுள்ளனர்.

புளொட், ரெலோ, ஈ. பி. ஆர். எல். எவ் ஆகிய தமிழ்க் கட்சிகளே கூட்டாகப் போட் டியிடத் தீர்மானித்துள்ளன.

இதேவேளை ஈ. பி. டி. பி தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய கட்சிகள் இத்தேர்த லில் தனித்தனியாக போட் டியிடவுள்ளதாகவும் தெரி விக்கப்படுகிறது. (வ)

## ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர்கள் இன்று வவுனியா விஜயம்

(வவுனியா)

இனப்பிரச்சினை குறித்து அரசாள்வதற்கு இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐரோப் பிய பாராளுமன்றத்தின் தூதுக்குழுவில் அங்கம்வகிக் கும் பிரித்தானிய உறுப்பினர் கள் றிச்சாட் கேடிட் பெர்ட்கீவன் ஆகிய இருவரும் இன்று வவுனியா வரவுள்ள னர்.

வவுனியா வரும் இவர்கள் வவுனியாவின் தற்போதைய நிலவரம் மற்றும் அங்குள்ள அகதிகள் முகாம்கள் ஆகிய வற்றிற்கும் விஜயம் செய்து அவற்றைப் பார்வையிடவுள் ளார்.

வன்னி மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் எஸ். சிவ தாசன் வவுனியா அரச அதி பர் கெ. கணேஷ் மற்றும் படை அதிகாரிகள் ஆகியோ ரையும் சந்தித்து வவுனியா நிலவரம் குறித்து ஆராயவுள் ளார். (வ)

### பாராளுமன்றில்...

னணி அரசுக்கு விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்கும் அவசியம் தற்போது ஏற்பட் டுள்ளது.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கத்து டனேயே அரசியல் அமைப் பினை மாற்றி அதிகாரங்க ளைப் பரவலாக்க அரசு நட வடிக்கை எடுத்துவருகிறது.

இன்றைய சூழ்நிலையில் எமது நாடு வரலாறுகாண முடியாத பாரிய நெருக்கடி களை எதிர்நோக்கியுள்ளது. இந்த நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்கு அரசு சகல முயற்சிகளையும் மேற் கொண்டுவருகிறது.

சிறுபான்மையினரான தமிழ், முஸ்லிம் மக்களை தமக்கு வரலாற்றுரீதியாக இளைக்கப்பட்ட குறைபாடு களுக்கு நிரந்தர அரசியல் தீர்வொன்றை எதிர்பார்த் துள்ளனர். இத்தகைய குறை பாடுகளைக் களைவதற்கு அரசு நேர்மையுடனும் அர்ப் பணிப்புடனும் செயற்பட்டு வருகிறது.

ஆகஸ்ட் மாதம் 24 ம் திகதி நள்ளிரவு 12 மணியுடன் இந்தப்பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் முடிவடைகிறது ஜனநாயத்தின்வழி நின்று அதற்குமேல் ஒரு நிமிடம் தானும் ஆட்சி செய்யமாட் டேன்.

இந்நிலையில் அரச நிர் வாக சேவை உத்தியோகத் தர்கள் தேர்தல் விடயங் களில் நீதியாகவும், நாணய மாகவும் நேர்மையாகவும் நடந்து கொள்ள வேண்டு மென ஜனாதிபதி கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் பொது நிர்வாக அமைச்சர் ரத்தின சிறிவிக்கிரமநாயாக்கா பிரதி அமைச்சர் மொன்டி கொபல்லா ஆகியோரும் கலந்துகொண்டனர். (வ)

### நீதியான...

விடுதலைப்புலிகளுடன் தொடர்பற்றவர் என எடுத் துக் கூறினர்,

அதற்குப் பதிலளித்த காமினி ஜெயசுந்தர சஞ்சீவ னின் மரணத்தில் தவறு நடந் துள்ளதை தாம் ஏற்றுக் கொள்வதாகவும், உரியவிசா ரணை நடத்தத் தான் உடன் நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார்.

இதேவேளை சம்பவத்தை நேரில் கண்டவர்கள் எவ்வித அச்சமும்மின்றி சாட்சியளிக்க முடியுமெனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இச்சந்திப்பின் போது படைத் தரப்பில் காங்கேசன் துறை குற்றப் புலனாய்வுப் பொறுப்பதிகாரி, சுன்னா கம் பொலிஸ் பொறுப்பதி காரி ஆகியோரும் கலந்து கொண்டனர். (ந)

## யுவதி கைது!

(கொழும்பு)

கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த இளம் தமிழ் யுவதி ஒருவர் நேற்று நீர்கொழும் பில் வைத்து பொலிசாரி னால் கைது செய்யப்பட் டுள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது.

நீர்கொழும்பில் கைது செய்யப்பட்ட இந்த இளம் யுவதி விடுதலைப் புலிகளின் பொலிஸ் பிரிவில் இருந்தவர் என்று சந்தேகிக்கப்படுவ தாகவும் தெரிவிக்கப்படு கிறது. (வ)

### இறுதிக் கிரியை...

வர்கள் கலந்து கொள்வார் கள் என எதிர்பார்க்கப்படு கின்றது.

இறுதி ஊர்வலம் யாழ். இந்துக் கல்லூரி மாணவர் களின் ''பாண்ட்'' வாத்தி யத்துடன் இடம்பெறும் என வும், தெரிவிக்கப்படுகின்றது. (வ-4)


### விற்பனைக்குண்டு

வான்கோழி (1 Kg 150 ரூபா), யமுனா பாரி கடா என்பன விற் பனைக்கு உண்டு. இன்று மட்டும் தொடர்பு இல. 75, செட்டித்தெரு, நல்லூர். (கி-657)

## கஜன்

ஊர்காவற்றுறை

ரஜனி, மீனா நடித்த

## உழைப்பாளி

காட்சி நேரம்
பி.ப 3.30 மணி
(கி/652)

## நாகம்ஸ்

(சுன்னாகம்)

ரஜனிகாந், சௌந்தர்யா ரம்யாகிருஷ்ணன் நடித்த

## படையப்பா

(ரீஸ்)
11.00, 2.30 [பு:நே]
(கி/646)


இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு; யாழ்ப்பாணம்; எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது!